# பதவிகள் - வெற்றிடம்

## அமைச்சரவை அலுவலகம்

### இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I தரம் II ஐச் சேர்ந்த பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு நியமிப்பதற்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்

அமைச்சரவை அலுவலகத்தில் பிரதி பணிப்பாளர் (தகவல், தொடர்பாடல், தொழில்நுட்பம்) பதவி வெற்றிடமொன்று நிலவுகின்றதோடு, இதன் பொருட்டு இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் 2019.09.12 ஆந் திகதியிடப்பட்டதும் 28/2019 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் இணைப்பு 02 இற்கு அமைவாக தயாரிக்கப்பட்டு இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2023, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக அமைச்சரவைச் செயலாளருக்கு கிடைப்பதற்கு ஆவணம் செய்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதிப் பணிப்பாளர் (தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" என குறிப்பிடப்படுதல் வேண்டும்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி : அமைச்சரவைச் செயலாளர்,
அமைச்சரவை அலுவலகம்,
லொயிட்ஸ் கட்டடம்,
சேர் பாரொன் ஜயதிலக்க மாவத்தை,
கொழும்பு - 01.

03. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2017.12.22 ஆந் திகதியிடப்பட்டதும் 2050/43 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் சேவை பிரமாணக் குறிப்புக்கும் 2019.09.12 ஆந் திகதியிடப்பட்டதும் 28/2019 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கும் அமைவாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீடசையில் காட்டும் திறமையின் அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அமைச்சரவை அலுவலகத்தின் பிரதி பணிப்பாளர் (தகவல், தொடர்பாடல் தொழல்நுட்பம்) பதவிக்கு நியமனம் செய்யப்படும்.

04. இந்த நேர்முகப் பரீட்சையின் போது புள்ளி வழங்கப்படும் விரிவான திட்டமானது இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

அமைச்சரவைச் செயலாளர்.

அமைச்சரவை அலுவலகம்,
லொயிட்ஸ் கட்டடம்,
சேர் பாரொன் ஜயதிலக்க மாவத்தை,
கொழும்பு 01,
தொலைபேசி இலக்கம் : 0112329620/0112422438
தொலைநகல் : 0112323730
மின்னஞ்சல் : info@cabinetoffice.gov.lk

## அமைச்சரவை அலுவலகம்

இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I தரம் II ஐச் சேர்ந்த பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு நியமிப்பதற்கான தகுதிகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கும் திட்டம்

| தொடர் இலக்கம் | பரீட்சித்து புள்ளி வழங்கப்படும் தலைப்புகள் | ஆகக்கூடிய புள்ளிகள் | மொத்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **சேவை அனுபவம் :** | | 60 |
| | (i) இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I தரம் II இல் தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தின் ஒரு (01) வருடத்திற்கு 05 புள்ளிகளும் ஒரு (01) வருடத்திற்கு குறைவானதும் ஆறு (06) மாதங்களுக்கு மேலானதுமான சேவைக்காலத்திற்கு 2 1/ 2 புள்ளிகளும் வழங்கப்படும். ஆறு (06) மாதங்களுக்கு குறைந்த சேவைக்காலத்திற்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. | 50 | |
| | (ii) அமைச்சரவை அலுவலகத்தில் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப தேவைகளுக்கு (பிரதி / உதவி பணிப்பாளராக) உரியதான முன் அனுபவத்திற்கு (ஆகக்கூடுதலாக 05 வருடங்கள்) வருடமொன்றுக்கு இரண்டு (02) புள்ளிகள் வீதமும் ஆறு (06) மாதங்களுக்கு மேலான காலப்பகுதிக்கு 01 புள்ளியும் வழங்கப்படும். ஆறு (06) மாதங்களுக்கு குறைந்த காலத்திற்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. | 10 | |
| 02 | **தகைமைகள் :** | | 40 |
| | (i) கல்வித் தகைமைகள் | 15 | |
| | உத்தியோகத்தர்களை சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது கவனத்திற்கொள்ளப்பட்ட அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக இலங்கை தகவல், தொடர்பாடல் தொழல்நுட்ப சேவையின் சேவை பிரமாணக் குறிப்பில் நிபுணத்துவ துறை என்னும் வகுப்பீட்டிற்குரிய அல்லது விண்ணப்பம் கோரப்பட்டுள்ள பதவிக்குரிய கலவித் தகைமைகள் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படும். | | |
| | அ. கணினி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு - 15 புள்ளிகள் | | |
| | ஆ. கணினி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா - 10 புள்ளிகள் | | |
| | - பெற்றுள்ள உயர் தகைமைக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும். | | |

| தொடர் இலக்கம் | பரீட்சித்து புள்ளி வழங்கப்படும் தலைப்புகள் | ஆகக்கூடிய புள்ளிகள் | மொத்த புள்ளிகள் |
|---|---|---|---|
| | **(ii) தொழிற் தகைமைகள்**<br><br>அ. (i) தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப துறைக்குரியதாக பெற்றுள்ள ஆகக்குறைந்தது ஒரு (01) வருட காலம் அல்லது மேலான காலத்துடன் கூடிய டிப்ளோமா பாடநெறி சார்பில் (உள்நாட்டு/வெளிநாட்டு) - 10 புள்ளிகள்<br><br>(ii) குறித்த துறையில் ஆறு (06) மாதங்கள் அல்லது அதற்கு கூடிய ஒரு வருடத்திற்கு குறைவான பாடநெறிகள் சார்பில் - 05 புள்ளிகள்<br><br>**குறிப்பு**<br><br>பின்வரும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் சான்றிதழ்கள் சார்பில் (Professional Certificatons) கால எல்லை கவனத்திற் கொள்ளப்படாது மேல் 02. (ii) அ. (i) இன் கீழ் கவனத்திற் கொள்ளப்படும்.<br><br>1. BCS/ ACS<br>2. Microsoft Certifications<br>3. Sun Certifications<br>4. Cisco Certifications<br>5. CISSP Certifications | 10 | |
| | **(iii) விசேட பணிகள்/பங்களிப்புகள்**<br>இதன் கீழ் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப துறைக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட புத்தாக்கங்கள், மேம்படுத்தல்கள், வெற்றிகள், பரிசுகள் மற்றும் மெச்சுதல்கள் சார்பில் புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>அ. பின்வரும் துறைகள் தழுவப்படும் புத்தாக்கங்கள், மேம்படுத்தல்கள், வெற்றிகள், பரிசுகள் என்பன பொருட்டு ஒன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் ஆகக்கூடுதலாக 05 பிரிவுகள் சார்பில் - 10 புள்ளிகள்<br><br>1. மென்பொருள் வடிவமைப்பு/ ஆக்கம் (Software Design/ Development)<br>2. வலையமைப்பு நிர்வாகம் (Network Administration)<br>3. முறைமை நிர்வாகம் (System Administration)<br>4. தரவுத்தள நிர்வாகம் (Data Base Administration)<br>5. பொதுவான தகவல் தொழில்நுட்ப பணிகள் மற்றும் பிற (General ICT Tasks & ets.) | 10 | |

| தொடர் இலக்கம் | பரீட்சித்து புள்ளி வழங்கப்படும் தலைப்புகள் | ஆகக்கூடிய புள்ளிகள் | மொத்த புள்ளிகள் |
|---|---|---|---|
| | ஆ. பொது 230 பீ படிவத்தின் மூலம் முன்வைக்கப்படும் அமைச்சு செயலாளரினால் / திணைக்களத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு (01) மெச்சுதல் சார்பில் 01 புள்ளி வீதம் அதாவது 05 மெச்சுதல்கள் சார்பில் ஆகக்கூடுதலாக 05 புள்ளிகள் மாத்திரம் வழங்கப்படுவதோடு, விண்ணப்பதாரர் ஒருவர் மெச்சுதல் சார்பில் ஆகக்கூடுதலான 05 புள்ளிகளை பெற்றுக் கொண்டதன் பின்னர், மேல் (III) (அ) வின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்காக இந்தப் பகுதியின் கீழ் வழங்கப்படும் மீதி 05 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.<br>கவனிக்கவும்<br>* புத்தாக்கங்கள் மேம்படுத்தல்கள், என்பன விண்ணப்பதாரரே செய்துள்ளார் என்பதை திணைக்களத் தலைவரால் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.<br>* வெற்றிகள், பரிசுகள் என்பன விண்ணப்பதாரரரே பெற்றுள்ளார் என்பதை திணைக்களத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.<br>**(iv) நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் ஆற்றல் :**<br>அ. தலைமைத்துவம் - 02 புள்ளிகள்<br>ஆ. தெளிவாக கருத்துக்களை தெரிவிக்கும் ஆற்றல் - 02 புள்ளிகள்<br>இ. தொழில் பண்பு - 01 புள்ளி | 05 | |
| | மொத்தம் | | 100 |

**அமைச்சரவை அலுவலகம்**

இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I தரம் II ஐச் சேர்ந்த பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

பகுதி (அ) - உத்தியோகத்தரினால் நிரப்பப்படுதல் வேண்டும்.

1. முழுப்பெயர் (திரு./திருமதி/செல்வி):..........................................................................
2. பிறந்த திகதி :..........................................................................
3. தேசிய ஆள் அடையாள அட்டையின் இலக்கம் : ..........................................................................
4. சேவைக் காலம் :

| வகுப்பு /தரம் | சேவைக்காலம் |
|---|---|
| வகுப்பு I தரம் I | |
| வகுப்பு I தரம் II | |
| வகுப்பு I தரம் III | |

5. தற்போது சேவையாற்றும் பதவி மற்றும் பணித்துறை : ..........................................................
6. கல்வித் தகைமைகள் :
   பெற்றுக்கொண்டுள்ள பட்டப்பின் படிப்பு/பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பற்றிய விபரங்கள் :

| பட்டப்பின் படிப்பு / பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | வருடம் | பல்கலைக்கழகம் | விடயங்கள் |
|---|---|---|---|
| | | | |

7. தொழிற் தகைமைகள் : ..........................................................................................................................................

8. பூர்த்தி செய்த விசேட பணிகள் :

| நிறைவேற்றிய சேவை மற்றும் விசேட பணிகள்/பங்களிப்புகள்/வெற்றிகள் | விபரம் | தாபனத் தலைவரின் சான்றிதழ் உள்ளது/ இல்லை |
|---|---|---|
| | | |

மேற்போந்த தகவல்கள் உண்மையானவையென வெளிப்படுத்துகின்றேன்.

திகதி : ....................

..........................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.
பதவிப் பெயரும்,
உத்தியோகபூர்வ இலட்சினையும்.

பகுதி (ஆ) – திணைக்களத் தலைவரினால் நிரப்பப்படுதல் வேண்டும்.

i. உத்தியோகத்தர் விண்ணப்பம் கோரப்படும் திகதியன்றுக்கு கிட்டிய 03 வருட காலம் தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ளார்/பூர்த்தி செய்யவில்லை.

ii. உத்தியோகத்தர் விண்ணப்பம் கோரப்படும் திகதியன்றுக்கு கிட்டிய 03 வருட காலம் சம்பளவேற்றங்களை பெற்றுள்ளார்/ பெறவில்லை.

iii. உத்தியோகத்தர் விண்ணப்பம் கோரப்படும் திகதியன்றுக்கு கிட்டிய 03 வருட காலத்திற்குள் ஒழுக்காற்று தண்டனைக்கு ஆளாகியுள்ளார்/ஆளாகவில்லை.

iv. உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அல்லது ஒழுக்காற்று விசாரணை நடைபெற்று வருகின்றது/நடைபெறவில்லை.

v. கிட்டிய 03 வருட காலத்தில் பெற்றுள்ள லீவு தொடர்பிலான விபரங்கள்

| தொடர் இலக்கம் | வருடம் | சம்பளத்துடனான லீவு | அரைச் சம்பளத்துடனான லீவு | சம்பளமற்ற லீவு |
|---|---|---|---|---|
| | | | | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உத்தியோகத்தரின் சொந்த கோவைக்கு அமைவாக சரியானதெனவும் இந்த உத்தியோகத்தர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் இதன் பொருட்டு அவரை பின்னுரிமையாளரின்றி/ பின்னுரிமையாளருடன்/ பின்னுரிமையாளரை பின்னர் பெற்றுத் தரும் அடிப்படையில் விடுவிக்க முடியுமெனவும் அறியத்தருகின்றேன்.

திகதி : ....................

..........................
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயரும்,
உத்தியோகபூர்வ இலட்சினையும்.

09- 05